Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 06, 2022

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 06, 2022 | ஒளி: 08 கதிர் 093 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## கோட்டாவை பிரதமராக்க கலந்துரையாடவில்லை



நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பது பற்றியோ அல்லது இந்த அரசாங்கத்தில் அவருக்கு வேறு பதவியை கொடுப்பது பற்றியோ எந்த கலந்துரையாடலும் நடைபெறவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எப் என்பது ஒரு வைத்தியர்

### ஆலோசனைகளுக்கு அமையவே இறுதி பெறுபேறு கிடைக்கும்

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ.எம்.எப்) முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களை ஜப்பான், சீனா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகள் வரவேற்றுள்ளன. கடன் மீள் கட்டமைப்பு குறித்து தமது ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளன என குறிப்பிட்ட வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஐ.எம்.எப் என்பது வைத்தியர் போன்றது. அவர்கள் எமக்கு மருந்துகளை வழங்குவார்கள். அதனை நாம் உற்கொள்கின்றோமா, சிகிச்சையை பெற்றுக்கொள்கிறோமா என்பதற்கு அமையவே இறுதி பெறுபேறுகள் கிடைக்கும் என தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வெளியகப்பொறிமுறையை முழுமையாக எதிர்ப்போம்

### உண்மையைக் கண்டறிவதற்கான தேசிய பொறிமுறையொன்றை உருவாக்கும்

இணை அனுசரணை நாடுகளினால் இம்முறையும் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்பட்டால், அது எமது அரசியலமைப்பிற்கு முரணாக காணப்படுமாயின் அதனை நாம் முழுமையாக எதிர்ப்பதுடன், அதற்கு ஏனைய சர்வதேச நாடுகளின் ஆதரவை நாடுவோமென வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் இப்பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உண்மையைக் கண்டறிவதற்கான தேசிய பொறிமுறையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று (5) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## ஜெனிவா கூட்டத்தொடருக்கு இன்று பயணமாகிறது இலங்கையின் விசேட குழு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்கு இலங்கையிலிருந்து விசேட குழுவொன்று இன்று பயணமாகின்றது. இவ்வாறு செல்லவிருக்கும் பிரதிநிதிகள் குழுவிற்கு தான் தலைமை தாங்குவதாகவும், அக்குழுவில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உட்பட மேலும் சிலர் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவதை இலகுபடுத்த விசேட குழு நியமனம்

யுத்த காலத்தில் இந்தியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பும் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திமா விக்ரமசிங்க தலைமையிலான இக்குழுவில் குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நீதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## போராட்டங்கள் இப்போதைக்கு முடிவுறாது



விக்கிரமசிங்க ஆட்சியிலும் கைதுகள், அடக்குமுறைகள் இடம்பெறுகின்றன. இவற்றுக்கு எதிரான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதே தவிர அது இப்போதைக்கு முடிவுறாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.


தொடர்ச்சி P2

## சிலிண்டர் விலைகளை குறைத்தது லிட்ரோ

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள், நேற்று (05) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், நேற்று (05) காலை தெரிவித்தார். அதற்கமைய, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 113 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சீரற்ற வானிலையால் 9 மாவட்டங்களுக்கு சிவப்பு அறிவித்தல்

### 3 பேர் காயம் 1,214பேர் பாதிப்பு

இன்றையதினம் (06) இரவு வரை நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்யக் கூடும் என்று எதிர்வு கூறியுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், 9 மாவட்டங்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என்றும் அந்த இடங்களின் சில பகுதிகளில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 325 குடும்பங்களைச் சேர்ந்த 1,214 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுன், மூவர் காயமடைந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், அத்தனகல, களு, களனி, கிங் மற்றும் நில்வள கங்கைகளின் தாழ்நிலப்பகுதிகளில் வசிப்போருக்கு நீர்ப்பாசன திணைக்களம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நலன்புரி மானியம் பெறுவோருக்கு QR

நலன்புரி மானியங்களுக்கு தகுதியான தனிநபர்களுக்கு கியூஆர் (QR) குறியீட்டு முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி.விஜயரத்ன தெரிவித்தார்.

நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கோட்டாவை கைது செய்க

பா.நிரோஸ்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார். ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று இலங்கையை அவமானப்படுத்திக்கொண்டிருப்பதை விடவும், அவர் இலங்கைக்கு வந்தது நல்லது.

தொடர்ச்சி P2



## கொழும்புக்கு புறப்பட்டது 'P627' ரோந்துக் கப்பல்

### நவம்பரில் வந்து சேரும்

அமெரிக்காவினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள 'P 627' ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் சியெட்டெல் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது. இரண்டு மாதங்கள் ரோந்து பயணத்தை ஆரம்பித்து, எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் வாரத்தில் குறித்த கப்பல் இலங்கையை வந்தடையும் எனவும், அதன் பின்னர் குறித்த கப்பலுக்கு இலங்கை உத்தியோகப்பூர்வமாக பெயர் சூட்டும் எனவும் இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## மாணவர்களை ஏற்றாது சென்ற பேருந்துகள் ஏ–9 வீதியை மறித்து போராட்டம்; 1 மணிநேரம் போக்குவரத்து தடை

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பனிக்கன்குளம்,கிழவன்குளம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 60 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்தில்

தொடர்ச்சி P2

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

## பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது

### டிரான்ஸ்பேரன்சி கண்டனம்

நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு சவால் விடுக்கும் வகையில் அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்டு குரல் எழுப்பிய பொதுமக்களை கைது செய்தல் மற்றும் அவர்கள் மீது ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும், எந்தவொரு சூழ்நிலையிலும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் சொந்தமான பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் அந்நிறுவனம் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஊழலற்ற நாட்டினை உருவாக்கும் நோக்குடன்

தொடர்ச்சி P2

## பொருளாதார நெருக்கடியில் கோட்டாவுக்கும் பங்குண்டு

பா.நிரோஸ்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு விதத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பொறுப்புக்கூற வேண்டும் என தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன, கோட்டாவை தனிப்பட்ட வகையில் பாதுகாக்கும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். வற் வரியை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தபோது அதனை ஏன் குறைக்கிறீர்கள் என்றார்கள், தற்போது வற் வரியை அதிகரித்துள்ள நிலையில் ஏன் அதிகரித்தீர்கள் என கேட்பதாகவும் தெரிவித்தார்.

அதுபோலவே வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் செலுத்தியபோதும் இவ்வாறே அரசாங்கத்தை விமர்சித்தார்கள். நூற்றுக்கு நூறு சதவீதம் நன்மையைப் பயக்கும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.எம்.எப் என்பது ஒரு வைத்தியர்

வெளிவிவகாரத்துறை அமைச்சில் நேற்று (5) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப தேவையான பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி, எதிர்காலத்தில் நிலையான பொருளாதார வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். பொருளாதார மறுசீரமைப்பு விடயத்தில் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும். வரி அறவீடுகளை முன்னெடுக்க வேண்டும், வரி செலுத்தக்கூடியவர்களிடம் வரிகளை அறவிட வேண்டும். புதிய வேலைத்திட்டங்கள் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே நோக்கமாகும்.

இப்போது ஐ.எம்.எப்புடன் கலந்துரையாடி வருகின்றோம். இதன்போது ஐ.எம்.எப்புடன் பணியாற்றினாலும், இல்லாவிட்டாலும் கண்டிப்பாக செய்து முடிக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் பல உள்ளன. குறிப்பாக வரி மறுசீரமைப்பு, விலை மற்றும் செலவுகளை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தை உருவாக்குதல், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களை பாதுகாக்க சமூக கட்டமைப்பு பொறிமுறை ஒன்றினை உருவாக்குதல், தரவுகளை அடிப்படையாக கொண்ட நிதி கொள்கையொன்றை உருவாக்குதல், மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துதல், வங்கிக் கட்டமைப்பை பலப்படுத்தும் விதமாக நிலையான வங்கி கட்டமைப்பை உருவாக்குதல், ஊழல் குற்றங்களுக்கு எதிரான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல். இதனையே ஐ.எம். எப்பும் வலியுறுத்தியுள்ளது. ஆனால் நீண்டகாலமாக இவ்வாறான மறுசீரமைப்பு வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்றார்.

# போராட்டங்கள் இப்போதைக்கு முடிவுறாது

உலகில் எந்தவொரு நாடும் இலங்கையை போன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டதில்லை. இது மிகப்பெரிய அவமானமாகும் எனவும் கூறினார்.

2005 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த நாட்டை ஆட்சி செய்த சகல தலைவர்களும் தான்தோன்றித்தனமான தீர்மானங்களையே எடுத்தனர். மக்கள் எமக்கு வாக்களித்துவிட்டனர், இனிமேல் நாம் நினைத்ததை செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். நாட்டின் சகல வளங்களும் எமக்கே சொந்தமானது, அனைத்தையும் நாம் உரித்தாக்கிக்கொள்ள முடியும், அனைத்து மோசடிகளையும் செய்யலாம் என்ற மனநிலையில் இருந்தனர். இதற்கு எதிராக யாரும் குரல் எழுப்பினால் அவர்களை கொன்றுவிடுவார்கள். அல்லது வெவ்வேறு இடங்களுக்கு கொன்றுசென்று நெருக்கடிகளை ஏற்படுத்துவார்கள் என தெரிவித்த அவர்,

சகல தரப்பையும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு நல்லதே, ஆனால் கள்ளர்களை இணைத்துக்கொண்டு பயணிக்க முடியாது. விக்கிரமசிங்க ஆட்சியிலும் கைதுகள், அடக்குமுறைகள் இடம்பெறுகின்றன. இவற்றுக்கு எதிரான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதே தவிர அது இப்போதைக்கு முடிவுறாது. உலகில் எந்தவொரு நாடும் இலங்கையை போன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டதில்லை. கையில் ஐந்து சதம் கூட இல்லை. இது மிகப்பெரிய அவமானமாகும். இதற்கு முன்னர் கௌரவமாக என்னால் செல்ல முடிந்தது. ஆனால் இப்போது ஒழிந்து திரிய வேண்டியுள்ளது என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியென ஒரு கட்சி இன்று இல்லை, பெயரும் ஒரு சில பைத்தியற்காரர்களும் மட்டுமே அந்தக் கட்சியில் உள்ளனர்.கட்சியின் ஜனநாயகத்தை கொலைசெய்துவிட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# முழுமையாக எதிர்ப்போம்

பேரவையின் கடந்த கூட்டத்தொடரின் போது முன்வைக்கப்பட்ட ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வெளியகப்பொறிமுறை குறித்து நாம் ஏற்கெனவே எமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளோம். இதனை நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம் என்றார்.

இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகளால் இம்முறையும் புதிய தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்பட்டால், எமது அரசியலமைப்புக்கு புறம்பான விடயங்கள் இதன்போதும் காணப்படுமாயின் அதனை நாம் முழுமையாக எதிர்ப்பதுடன் அதற்கு ஏனைய சர்வதேச நாடுகளின் ஆதரவை நாடுவோம் எனக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாடுகளுடன் இருதரப்பு மற்றும் பல் தரப்புத்தொடர்புகளைப் பேணுவதற்கும் அதேபோல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்வைக்கப்படும் தீர்மானங்களின் போது, நாட்டின் அரசியலமைப்பிற்கு உட்பட்ட வகையில், அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும இலங்கை தயாராக உள்ளதென தெரிவித்த அமைச்சர், அரசியலமைப்புக்கு அப்பாற்பட்டு எம்மால் எந்தவொரு தீர்வையும் பெற்றுக்கொடுக்க முடியாது. அவ்வாறு செயற்படுவதற்கான அதிகாரங்களும் எம்மிடத்தில் இல்லை என்றார்.

நீண்டகாலமாகத் தொடரும் இப்பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் உண்மையைக் கண்டறிவதற்கான தேசிய பொறிமுறையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். எனவே, ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக சகல தப்பினராலும் ஏற்கக்கூடிய வகையில், உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறையை உருவாக்கி, பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இந்த நடவடிக்கையானது, ஒரு முடிவை எட்டுவதை நோக்காகக்கொண்டதே தவிர, யார்மீதும் பழிசுமத்துவதை நோக்காகக்கொண்டதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# கோட்டாவை பிரதமராக்க கலந்துரையாடவில்லை

ராஜபக்ஷவினரை பாதுகாப்பது குறித்தோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இரகசியமான எந்தவித ஒப்பந்தங்களையும் ஜனாதிபதி செய்துகொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷவினருடன் இரகசிய ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளதாக எமது பழைய நண்பர்கள் விமர்சிக்கலாம். ஆனால் இப்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்பதே எமது ஒரே நோக்கமாகும். அதை தாண்டிய தனிப்பட்ட எந்தவித டீலையும் யாருடனும் நாம் செய்துகொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்துகின்றார். சகல தரப்புடனும் இது குறித்து கலந்துரையாடி வருகின்றார்.இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் ஐக்கிய தேசியக் கட்சி தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது என்றார்.

# இன்று பயணமாகிறது இலங்கையின் விசேட குழு

மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் தற்போதைய நிலைமைகள், நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகள், மற்றும் இதுவரையில் நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்துவதுடன், உப குழுக்கள், புலம்பெயர் அமைப்புகள் என சகல தரப்புடனும் கலந்துரையாடி எமக்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள கூடிய முயற்சி எடுப்போம் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தமிழ் மிரருக்கு தெரிவித்தார்

# கோட்டாவை கைது செய்க

நாட்டை நாசம் செய்துவிட்டு தப்பியோடிய கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பும்போது அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டு அரச செலவில் தங்க வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

கோட்டா ஜனாதிபதியாக இருக்கும்போது பாண் ஒன்றின் விலை 60 ரூபாயாக இருந்தது. தப்பியோடும்போது 160 ரூபாயாக இருந்தது. திரும்பி வரும்போது பாணின் விலை 300 ரூபாய். எனவே நாட்டையும் நாட்டுப் பொருளாதாரத்தையும் நாசம் செய்த கோட்டாவை கைது

> **கோட்டா ஜனாதிபதியாக இருக்கும்போது பாண் ஒன்றின் விலை 60 ரூபாயாக இருந்தது. தப்பியோடும்போது 160 ரூபாயாக இருந்தது. திரும்பி வரும்போது பாணின் விலை 300 ரூபாய்.**

செய்து தண்டனை வழங்க வேண்டும். அரந்தலாவை பிக்குகளை கொலை செய்த, காத்தான்குடியில் முஸ்லிம்களை கொலை செய்த பிள்ளையான் கட்சியின் மாநாட்டின் பிரதம அதிதியாக நாமல் பேபி கலந்துகொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

# நலன்புரி மானியம் பெறுவோருக்கு QR

சமுர்த்தி, முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோய் உதவி, போன்ற நலன்புரி திட்டங்களின் கீழ் தற்போது நன்மைகளைப் பெறும் தனிநபர்களை இலக்காகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்பவுள்ளது.

மேலும், மானியத்துக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்கள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நபர்களையும் இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 3.9 மில்லியன் குடும்பங்கள் இத்திட்டத்துக்கு விண்ணப்பிப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்த சபையின் தலைவர், இந்த வேலைத்திட்டம் 06 ஆரம்ப கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.



# நாடு திரும்புவதை இலகுபடுத்த விசேட குழு நியமனம்

யுத்த காலத்தில் இந்தியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையரை மீண்டும் அழைத்து வர வேண்டும் என "ஈழ அகதிகள் புனர்வாழ்விற்கான அமைப்பு" (OFERR) வேண்டுகோள் முன்வைத்திருந்தது. இதுகுறித்து பேசுவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (05) இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தற்போது சுமார் 58,000 இலங்கையர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாகவும் அவர்களில் 3,800 பேர் மாத்திரமே இலங்கைக்கு திரும்புவதற்கு தயாராக இருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்து இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கை வருவதை இலகுபடுத்துவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயமும் இச்செயன்முறையை இலகுபடுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, நீதி அமைச்சு மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் ஈழ அகதிகள் புனர்வாழ்வுக்கான அமைப்பின் (OFERR) பிரதம செயற்பாட்டாளர் சி.எஸ். சந்திரஹாசன், எஸ். சூரியகுமாரி உள்ளிட்டோர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

குரலெழுப்பிய பொதுமக்களை தன்னிச்சையாகவும் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றிய நிலையிலும் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய சட்ட ஏற்பாடுகளை தவறாக பயன்படுத்துவதனை தாம் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் இத்தகைய தன்னிச்சையான பிரயோகமானது

> **சட்டத்தின் இத்தகைய தன்னிச்சையான பிரயோகமானது பொதுமக்கள் தமது ஜனநாயக உரிமைகளை பின்பற்ற தயக்கம் காட்டும் நிலைமையினை உருவாக்கும். அதேவேளை இவை நாட்டிற்கு மோசமான விளைவுகளை உருவாக்கவும் வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது**

பொதுமக்கள் தமது ஜனநாயக உரிமைகளை பின்பற்ற தயக்கம் காட்டும் நிலைமையினை உருவாக்கும் அதேவேளை இவை நாட்டிற்கு மோசமான விளைவுகளை உருவாக்கவும் வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# சிலிண்டர் விலைகளை குறைத்தது லிட்ரோ

புதிய விலைக் குறைப்புக்கு அமைய, 4,664 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 4,551 ரூபாயாக குறைவடைந்துள்ளது. மேலும், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 45 ரூபாயாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 21 ரூபாயாலும் குறைக்கப்பட்டுள்ளன.

1,872 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,827 ரூபாயாகவும், 869 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 848 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள், இலங்கையில் உள்ள தங்களது உறவினர்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை டொலர்களில் கட்டணம் செலுத்தி முற்பதிவு செய்வதற்கான செயலியை லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# கொழும்புக்கு புறப்பட்டது 'P 627' ரோந்துக் கப்பல்

2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட இந்தக் கப்பல், கடற்படையின் செயற்பாட்டுத் தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு துறைமுகத்தை நோக்கி நேற்று முன்தினம்(03) பயணத்தை ஆரம்பித்துள்ளதாக கடற்படை தெரிவித்தது.

115 மீட்டர் நீளமும், 14000 கடல் மைல்களை கடக்கும் வேகத்தில் பயணிக்கும் திறனும் கொண்டுள்ள இந்த கப்பலானது, 187 சிப்பாய்கள் கொள்ளளவு, ஆயுத அமைப்புகள் மற்றும் நவீன இயந்திரங்களுடன் பொருத்தப்பி[பட்டுள்ளது.

# ஏ-9 வீதியை மறித்து போராட்டம்; 1 மணிநேரம் போக்குவரத்து தடை

கல்வி கற்று வருகின்றனர்இந்த கிராமங்களுக்கும் பாடசாலைக்கும் இடையில் சுமார் பத்து கிலோ மீற்றர் தூரமாகும். ஏ -9 வீதியூடாக போக்குவரத்து சேவைகள் பர இடம்பெறுகின்ற போதும் இந்த பாடசாலை மாணவர்களுக்கான சேவையை வழங்குவதில் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் சரியாக செயல்படவில்லை என மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மாணவர்கள் வீதியில் நின்று பேருந்தை மறிக்கும் போதும் அவர்களை ஏற்றாது செல்கின்ற அரச மற்றும் தனியார் பேருந்துகளால் மாணவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்லவும் பாடசாலையிலிருந்து மீண்டும் உரிய நேரத்திற்கு வீடு திரும்பவும் முடியாத நிலைமையில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்

மாணவர்களை மாத்திரமன்றி குறித்த கிராமங்களில் இருந்து மாங்குளம் நகரத்துக்குச் செல்கின்ற பொதுமக்கள், வயோதிபர்கள் மற்றும் நோயாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் பேருந்துகள் ஏற்றிச் செல்லாத காரணத்தினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பரீட்சைக்கு செல்ல வேண்டிய நிலையில் மாணவர்கள் 6.40 மணிமுதல் வீதியில் நின்றிருந்தனர். 8 மணியை கடந்தும் பேருந்துகள் எவையும் ஏற்றிச் செல்லவில்லை அதனையடுத்து மாணவர்களுடன் பெற்றோரும் நலன்விரும்பிகளும் இணைந்து ஏ_9 வீதியை மறித்து போராட்டம் நடத்தினர்

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாங்குளம் பொலிஸார் வீதியை திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்ததுடன் இது தொடர்பில் வந்து முறைப்பாடு பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர் . அதன் பின்னர் நீதிமன்றம் ஊடாக

> **பொதுமக்கள், வயோதிபர்கள் மற்றும் நோயாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்**

நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸார் உறுதியளித்தனர். அதன் பின்னரே அங்கிருந்து மக்கள் கலைந்து சென்றனர்.

வேலைப்பளு அல்லாத நேரங்களுக்கான

# மின் கட்டணத்தை பரிசீலனை செய்யவும்

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) இலங்கை மின்சார சபைக்கு (CBSL) அனுமதியளித்துள்ளதைத் தொடர்ந்து தொழிற்சாலைகளுக்கு உரித்தான வேலைப்பளுவற்ற (Off-peak) மற்றும் பகல் நேர (Daytime) மின்சார கட்டணங்கள் கடுமையாக அதிகரித்துள்ளனஎன கூட்டு ஆடை சங்கங்கள் மன்றம் (JAAF) சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முதற்கட்ட யோசனைப்படி, தொழில்துறைக்கான உச்சகட்ட மின்சாரக் கட்டணம் 6.85 ரூபாவில் இருந்து 14.50 ரூபாவாகவும், பகல் நேரக் கட்டணம் 11.00ரூபாவில் இருந்து 18.50 ரூபாவாகவும் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

உத்தேச இறுதி கட்டண அதிகரிப்பின்படி தொழில்துறையில் 113% வேலைப்பளுவற்ற (Off-peak) மின் கட்டண உயர்வு அசாதாரணமானது மற்றும் தொழில்துறைக்கு தீங்கு விளைவிக்கும் என்று JAAF சுட்டிக்காட்டியுள்ளது. JAAF இறுதிக் கட்டண உயர்வை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது மேலும் ஒவ்வொரு கட்டத்திலும் உத்தேச கட்டணங்கள் சுமார் 50% குறைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபைக்கு (CEB) ஏற்படும் பாரிய நட்டத்தைத் தவிர்ப்பதற்கு இந்தத் திருத்தங்கள் முக்கியமானது என்பதை தொழில்துறையினர் நன்கு அறிவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தாம் சுட்டிக்காட்டிய விடயங்களைக் கருத்திற் கொள்ளாமல் வேலைப்பளு அல்லாத நேரம் மற்றும் பகல்நேர கட்டண அதிகரிப்பு அங்கிகாரம்,, 12வது தொகுதிக்கு முதலில் அங்கிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணங்களை விட அதிகமாகும். மேலும், ஆச்சரியப்படும் விதமாக, பகல் நேரக் கட்டணங்களுக்கான திருத்தங்கள் முதலில் அங்கிகரிக்கப்பட்ட கட்டணங்களை விட மூன்று மடங்கு அதிகமாகும் என்றும் கூட்டு ஆடை சங்கங்கள் மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆடைத் தொழில்துறையின் தேவைகள் தொடர்பாக தொழில்துறை சார்பாக JAAF முன்வைத்த யோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், உத்தேச இறுதி தொழில்துறை மின்சாரக் கட்டணங்கள் குறித்து JAAF தனது வருத்தத்தை வெளிப்படுத்துகிறது.

Off-Peak கட்டணங்களின் அதிகரிப்பு Off-Peakன் நோக்கத்தையே குலைத்துவிட்டதாக JAAF வலியுறுத்துகிறது. அதாவது, Off-Peak நேரத்தில் வணிகங்கள் தங்கள் செயல்பாடுகளை நடத்த ஊக்குவிப்பதே இதன் நோக்கம். இந்த நடவடிக்கையானது தொழில்துறையின் செயல்பாட்டுச் செலவைக் கூட்டிச் சேர்க்கும். இதன் விளைவாக, வேலைப்பளு இல்லாத நேரங்களில் பணியாளர்களை நியமிப்பதற்காக அதிக செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும். மேலும், ஆடைத் தொழில் போன்ற ஆற்றல் மிகுந்த தொழில்கள் 24 மணி நேரமும் இயங்குகின்றன. அங்கு, Off-Peak மின்சாரக் கட்டணங்களின் விரைவான அதிகரிப்பு, முழுத் தொழிற்துறையின் மின்சாரக் கட்டணங்களில் மிகவும் அசாதாரணமான விளைவை ஏற்படுத்தும், எனவே அது எதிர்காலத்தில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு வழிவகுக்கும்.

Off-peak மற்றும் Daytime கட்டணம் வேகமாக அதிகரிப்பதால், முழுத் தொழில்துறையின் உற்பத்தி விலையும் அதிகரிக்கும், எனவே இந்த நிலைமையானது 2025ஆம் ஆண்டளவில் இலங்கையின் வருடாந்த ஆடை ஏற்றுமதி வருவாயை 8 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கான JAAFஇன் மூலோபாய உத்திகளை மோசமாக பாதிக்கும். ஏற்கனவே வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தும்.

எனவே, JAAF, PUCSLஐ, தொழில்துறையின் Off-peak மற்றும் Daytime மின்சாரக் கட்டணங்களை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறது, மேலும் ஆரம்ப முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மாற்று முன்மொழிவுகளையும் பரிசீலிக்க வேண்டும். ஆடைத் தொழில்துறையானது நாட்டின் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்க முடியும் என்பதால், நிறுவனங்களின் திட்டங்களில் இந்த விஷயத்தில் உன்னிப்பாக கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கோட்டாவுக்கு வரப்பிரசாதங்களை பெற்றுக்கொடுக்க வேண்டாம்



பா.நிரோஸ்

நாட்டை பொருளாதார நெருக்கடியில் தள்ளியமைக்குப் பிரதானமாக பொறுப்புக்கூற வேண்டியவரும், நாட்டை விட்டுத் தப்பியோடியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான எந்தவொரு வரப்பிரசாதங்களையும் வழங்கக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியவர்களை கண்டறிய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை சபாநாயகர் அமைக்க வேண்டும் எனவும் சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டை பொருளாதார நெருக்கடியில் தள்ளியமைக்குப் பிரதான காரணமானவரான நாட்டை விட்டுத் தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, நாட்டுக்கு ஒலிம்பிக் பதக்கத்தை வென்றவர் போல அமைச்சர்கள் சென்று வரவேற்றனர். கோட்டா பெற்றுக்கொண்ட பதக்கம் என்ன? நாட்டை வங்குரோத்துக்கு தள்ளியமையே கோட்ட பெற்றப் பதக்கம். நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்டவரே கோட்டா. எனவே அவருக்கு உத்தியோகபூர்வ இல்லமோ அல்லது வாகனங்களோ வழங்கப்படக்கூடாது. முன்னாள் ஜனாதிபதிக்கான எந்தவொரு வரப்பிரசாதங்களும் கோட்டாவுக்கு வழங்கப்படக்கூடாது. ஆனால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். இந்நாட்டில் உயிர் வாழ்வதற்கான உரிமை அவருக்கு இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி நாட்டு மக்களை வாழ முடியாத நிலைக்கு தள்ளியவர்கள் யார் என்பதை ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். இதனூடாக அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# இருவரையும் தண்டிக்க வேண்டும்



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பஷில் ராஜபக்ஷ ,அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் தண்டிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. தலைவரும் எம்.பி.யுமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொருளாதார மீட்சிக்கான கொள்கை திட்டத்தை அரசினால் மாத்திரம் தனித்து உருவாக்க முடியாது. அரசு ,தனியார் தரப்பினர்,விவசாயிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும்.பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பஷில் ராஜபக்ஷ,அஜித் நிவார்ட் கப்ரால் தண்டிக்கப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களை விற்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.ஆனால் அரச நிறுவனங்களை வேண்டுமென்றே நட்டமடைய செய்து அதனூடாக இலாபமடைந்த தரப்பினரை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்த வேண்டும் என்றார்.

# கிளைபோசேட் இறக்குமதிக்கு அனுமதி

**வர்த்தமானி இன்று அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது**

பெருந்தோட்டத் துறையில் களை கொல்லியாகப் பயன்படுத்தப்படும் கிளைபோசேட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் 1969ஆம் ஆண்டு 01ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.த சில்வா தலைமையிலான குழு கூடியபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய இந்த ஒழுங்குவிதிகள் அடங்கிய 2291/44ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இன்று (06) அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பூச்சிகொல்லிகள் பதிவாளர் நாயகத்தின் பரிந்துரையின் கீழ் கிளைபோசேட் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படவுள்ளது.

இந்த ஒழுங்குவிதிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டாலும், அது நிபந்தனைக்கு உட்பட்டதாகவே வழங்கப்படுகிறது என இக்குழுவின் தலைவர் தெரிவித்தார். இதற்கு முன்னர் அரசாங்க நிதி பற்றிய குழுவின் பரிந்துரைக்கு அமைய இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பில் இந்த கிளைபோசேட் பயன்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையடலை அடுத்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்றை நடத்திய பின்னர் எதிர்கால தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



தாய்நாட்டைக் காக்க

# இளம் படைவீரர்களை ஊக்குவிக்க வேண்டும்

ஜனநாயகம் என்ற போர்வையில் எமது இளம் படைவீரர்களின் உன்னத சேவையை குறைத்து மதிப்பிடும் வகையில் கேவலமான வீடியோ காட்சிகள் பரப்பப்பட்டு வருவது வருத்தமளிக்கிறது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை முன்னாள் படைவீரர் சங்கத்தின் 78 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு அத்திடியவிலுள்ள ஈகிள்ஸ் லேக்சைட் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மேலும் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், போரின் போது தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காக ஆற்றிய உன்னத சேவைகளையும் நினைவு கூர்ந்தார். தற்போதைய ஜனாதிபதியின் வழிகாட்டுதலுடன் முன்னாள் படைவீரர் சங்கம் மற்றும் அதன் சேவைகளை வளப்படுத்துவதற்கும் நாங்கள் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.






திருக்கோவிலில்

# இல்மனைட் அகழ்வுக்கு எதிர்ப்பு

எஸ்.கார்த்திகேசு



அம்பாறை, திருக்கோவில் பிரதேசம் தொடக்கும் பாணமை வரையாகவுள்ள சுமார் 70 கிலோ மீற்றர் தூர கடற்ரையோரப் பிரதேசத்தில், வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ள இல்மனைட் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஊடக சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பானது திருக்கோவில் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றதுடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி. கமலராஜன் ஆகியோர் கலந்துகொண்டு, இல்மனைட் அகழ்வுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்தனர்.

“திருக்கோவில் பிரதேசம் கனிய வளங்கள் உட்பட இயற்கை வளங்கள் நிறைந்த விவசாயம், மீன்பிடித் தொழிலை பிரதானமாகக் கொண்ட பிரதேசமாகும். இதனை அழித்து, இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதார தொழில்களை அழித்து, மக்களை நிர்க்கதியாக்கும் ஒரு செயற்பாடாக அமையவுள்ள இந்த இல்மனைட் அகழ்வை முன்னெடுக்க, நாம் ஒரு போதும் இடமமளிக்கப் போவதில்லை” என கலையரசன் எம்.பி தெரிவித்தார்.

இதேவேளை, “திருக்கோவில் பிரதேச சபையின் அனுமதியின்றி இங்கு இல்மனைட் அகழ்வுகள் முன்னெடுக்க முடியாது என்பதுடன் திருக்கோவில் பிரதேச மக்களின் வாழ்வாதாரம், பூர்வீக வாழ்வியல் இடங்களை நாசம் செய்யும் வரலாற்றுத் தவறுக்கு நான் உட்பட திருக்கோவில் பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கமாட்டோம்” என தவிசாளர் தெரிவித்தார்.

‘அன்பின் விலாசம்’

# கவிதை நூல் வெளியீடு



அ.அச்சுதன்



கவிஞர் த.சஞ்ஜீவன் எழுதிய ‘அன்பின் விலாசம்’ எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா, திருகோணமலை இந்துக் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கம்பவாரிதி இ. ஜெயராஜும் சிறப்பு விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவர் க.ச குகதாசன், திருகோணமலை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி. தண்டாயுதபாணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

மேலும், விருந்தினர்களாக திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி சந்திரவதனி தேவதாசன், திருகோணமலை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மா. இராசரெத்தினம், திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபர் செ. பத்மசீலன், எழுத்தாளர் மு. மயூரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அரசியலில் ஈடுபடும்

# பெண்களின் டிஜிட்டல் அறிவை மேம்படுத்தல்

கே.எல்.ரி.யுதாஜித்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தால் (கபே) ஏற்பாடு செய்யப்பட்ட, ‘ஜனனி’ டிஜிட்டல் மேம்பாட்டு திட்டத்தின் பயிற்சிப்பட்டறை, ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

கபே நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தலைமைத்துவத்தின் கீழ், இந்நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கந்தவேல் காண்டிபன், ‘ஜனனி’ திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜே.எவ். காமிலா பேகம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்திருந்தனர்.

நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக ‘ஐரெஸ்’ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க கலந்துகொண்டதுடன், வளவாளர்களாக கலாவர்ஷி கனகரட்ணம், நிஸ்ஸங்க ஹரேந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப் பயிற்சிப்பட்டறையில் இன்றைய டிஜிட்டல் உலகத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் தொழில்நுட்ப பாதுகாப்பு நடவடிக்கைகள், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் வழிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள், பெண் சிவில் பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

எம்.எஸ்.எம். ஹனீபா



பொத்துவில், தம்பிலுவில், கோமாரி ஆகிய பிரதேசங்களில் விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முன்தினம் (04) முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைக்கமைய, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் வழிகாட்டலில், கட்டாக்காலி நாய்கள், பூனைகள் என்பனவற்றுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதாக, தொற்று நோய்த்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.சீ.எம். பசால் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் தொடர்ச்சியாக விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உழவு இயந்திர கூலி;

# ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 14,000 அறவீடு




எம்.எஸ்.எம். ஹனீபா

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கைக்கான உழவு இயந்திர வேலைகளுக்கு அட்டாளைச்சேனை, பாலமுனை கமநல சேவை பிரிவில் ஏக்கர் ஒன்றுக்கு 14 ஆயிரம் ரூபாய் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கல்ஓயா வலதுகரை திட்ட முகாமையாளர் எஸ்.எல்.ஏ. அன்சார் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச விவசாய அமைப்புகளின் சம்மேளன பிரதிநிதிகளுக்கும், அட்டாளைச்சேனை பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல், அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (04) மாலை நடைபெற்றது.

இதன்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தில் பெரும் போக நெற்செய்கைக்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஏக்கர் ஒன்றுக்கு உழவு இயந்திரங்களுக்கான கூலி என்றும் இல்லாதவாறு 16 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 20 ஆயிரம் ரூபாய் வரை அறவீடு செய்வதற்கு உழவு இயந்திர உரிமையாளர்கள் தீர்மானித்ததால் விவசாயிகள் பல்வேறு அசௌகரீகங்களை எதிர்நோக்கினர்.

# நஞ்சற்ற உணவு விற்பனை

தீஷான் அஹமட்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பகுதிகளில் காணப்படும் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நஞ்சற்ற மரக்கறி வகைகளின் விற்பனை கண்காட்சி, மூதூர் பிரதேச செயலக வளாகத்தில் நேற்று (05) காலை நடைபெற்றது.

இதன்போது மூதூர் பகுதி தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களின் இரசாயன பசளை பாவிக்காத நஞ்சற்ற கீரை வகைகள், பயிற்றை, வெண்டை, கத்தரி உள்ளிட்ட மரக்கறி வகைகளின் விற்பனை இடம்பெற்றது.

குறித்த விற்பனை கண்காட்சியை மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ.எம்.முபாறக் தலைமையிலான பிரதேச செயலக அதிகாரிகள் பார்வையிட்டனர்.



சுகாதார சேவைகள்

# பணிப்பாளர் பதவியேற்றார்

மு.தமிழ்ச்செல்வன்




வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவ நிர்வாகத்துறை விசேட வைத்திய நிபுணர் திலிப் லியனகே, நேற்று (05) காலை பதவியேற்றுக் கொண்டார்.

பதவி ஏற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போது “யுத்த சூழ்நிலையிலும் மீள்குடியேற்றத்தின் பின்னரும் வடக்கில் கடமையாற்றிய எனக்கு, இந்த மாகாண மக்களின் உணர்வுகள் மற்றும் தேவைகள் நன்கு தெரியும்” எனக் குறிப்பிட்ட அவர் “நாட்டுக்கு எப்போதும் முன்னுதாரணமாக விளங்கும் வட மாகாண சுகாதாரத் துறையை அனைவரின் உதவியுடன் மேலும் முன்னோக்கி எடுத்துச் செல்வதே எனது இலக்கு” எனத் தெரிவித்தார்.

மக்களுக்காக தமது கடமையைச் செய்வதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்ப்பதாகவும் அதற்காக சகல தரப்பினரது ஆசியையும் வேண்டுகிறேன் என்றார்.

இதனிடையே, வடக்கில் மூன்று தகுதி வாய்ந்த மருத்துவ நிர்வாக அதிகாரிகள் இருந்தபோதிலும் தென்பகுதியில் இருந்து ஒருவரை நியமித்ததாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் சுகாதார அமைச்சின் கருத்தை அறிய முற்பட்டபோது, “வடக்கில் மூவர் அல்ல நால்வர் உள்ளனர். ஆனால், மாகாண சுகாதார அமைச்சிலிருந்து இவர்கள் நால்வரில் எவரையாவது நியமிக்குமாறு ஆளுநர் ஊடாகப் பரிந்துரைகள் எதுவும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களும் இப் பதவியைப் பொறுப்பேற்பதில் ஆர்வம் காட்டவில்லை” எனப் பதில் வழங்கப்பட்டது.





# விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் படுகாயம்

வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி, மடத்தடிப் பகுதியில் நேற்று முன்தினம் (04) மாலை 4.30க்கு இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து, மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 8 வயதுச் சிறுவன் கால் முறிந்த நிலையிலும் 48 வயதுடைய தந்தையும் 42 வயதுடைய தாயும் படுகாயமடைந்தும் உள்ளனர்.

கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடற்படையினரால்

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்

சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி, வலைப்பாடு பகுதியில் குடும்பஸ்தர் மீது கடற்படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு உள்ளதுடன், இரண்டு அலைபேசிகளும் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (04) இரவு இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில், வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய இராசரத்தினம் நிமால் எனப்பவரே, கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலுக்குள்ளான நபரின் படகை, அவரது நண்பர்கள் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் கடலுக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

ஆறு மணியைத் தாண்டி கரைக்குத் திரும்பிய படகு, கடற்படை முகாமிற்கு முன்பாக கரை ஏற்றப்பட்டது. படகினை செலுத்தியவர்கள், கடற்படை முகாமிற்கு பதிவுக்காக சென்றுள்ளனர். இதன்போது தமது படகில் ஏற்றி வந்த மண்ணெண்ணையை பதிவு மேற்கொள்ளும் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த மண்ணெண்ணை கொள்கலனை அகற்றுமாறு அவர்களிடம் கடற்டை அதிகாரி தெரிவித்ததை அடுத்து, அவர்கள் அதனை அகற்றியுள்ளனர். எனினும், இரு தரப்பனருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முரண்பாட்டின்போது, கடற்படை அதிகாரி ஒருவர், அவர்களை அச்சுறுத்தும் வகையில் துப்பாக்கியை சூடுவதற்குத் தயார் செய்ததாகவும், அதனை ஒளிப்பதிவு செய்தபோது அலைபேசியை பறித்து, பின்னர் தம் மீது தாக்கிதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றார்.

முதலைகள் அபாயத்தை தவிர்க்க

# தொண்டைமானாற்றில் இரும்பு வேலி அமைப்பு

யாழ்.தொண்டைமாற்றில் முதலைகள் நடமாட்டம் அதிகமாக உள்ளமையால் செல்வச்சந்நிதி கோவிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி, நீராடும் பகுதியை சூழ இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

வரலாற்று பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில், அதிகளவு பக்தர்கள் முருகப்பெருமானை தரிசிக்க நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தருகின்றனர். இந்நிலையில், கோவிலின் பின்புறம் உள்ள ஆற்றில் முதலைகளிடம் இருந்து பக்தர்கள் பாதுகாப்பாக நீராடும் பொருட்டு, இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அடியவர்கள் பயமின்றி நீராடலாம் என்றும் ஆற்றில் உள்ள முதலைகளை பாதுகாப்பாக வெளியேற்றவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தொண்டைமானாற்றில் முதலைகள் இருப்பது அவதானிக்கப்பட்டதால் அதில் நீராடுபவர்கள் அவதானமாக நீராடுமாறு சந்நிதியான் கோவில் நிர்வாகத்தினர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர்.

முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தியால்

# மயானத்தில் குழப்பம்

க.அகரன்



வவுனியா, இராசேந்திரங்குளம் மயானத்தை தூய்மைப்படுத்தி, அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை, நேற்று முன்தினம் (04) முன்னெடுக்கப்பட்ட போது அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

பிரதேச சபையின் அனுமதி பெற்று, இராசேந்திரங்குளம் மயானத்தை தனிநபர் ஒருவரின் நிதிப் பங்களிப்பில் தூய்மைப்படுத்தி, சுற்றிவர நிழல் மரங்கள் நாட்டி, தகன கொட்டகை, நீர்தாங்கி என்பவற்றை நிர்மாணிப்பதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த மயானத்தை உழவு இயந்திரம் மூலம் துப்புரவு செய்யும் பணி முன்னெடுக்கப்பட்ட போது, நீண்ட காலத்துக்கு முன்னர் சடலங்கள் புதைக்கப்பட்டு, அடையாளமின்றி காணப்பட்ட சில இடங்களும் உழவு இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்பட்டிருந்தன.

இதன்போது அங்கு வந்த மதகுரு ஒருவரும், மக்களும் தமது உறவினர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சுத்தம் செய்தமையால் அவற்றின் இடங்களை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தெரிவித்து அங்கு நின்ற அபிவிருத்தி உத்தியோகத்தருடன் முரண்பட்டனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் நிலைமையை மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இருப்பினும், அதனை ஏற்க மறுத்த மதகுரு, நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் குறித்த நடவடிக்கைக்கு எதிராக மக்களை அழைத்துச் சென்று முறைப்பாடு பதிவு செய்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு, உண்மை நிலையை அறிந்து அதனை மக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், கல்லறைகளுக்கு பாதிப்பு ஏற்படவில்லை எனவும் உடல்கள் புதைக்கப்பட்டு அடையாளமின்றி இருந்தமையால் உழவு இயந்திரம் மூலம் சில இடங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன எனவும் எடுத்துரைத்தனர்.

குறித்த இடங்களை அடையாளம் தெரியும் படி மண் போட்டு உயர்த்தி விடுமாறும் மக்களிடம் பொலிஸார் தெரிவித்தனர். இதனை மக்கள் ஏற்றுக் கொண்டனர். இதன்பின் அங்கு அமைதி நிலை ஏற்பட்டு, தொடர்ந்தும் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்துடன் போன பாலத்தால்

# தென்மதுரை மக்கள் அந்தரிப்பு

■ துவாரகஷான்

பொகவந்தலாவை, தென்மதுரை தோட்டத்தில் 200 குடும்பங்கள் பயன்படுத்தும் பாலமானது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை, அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாலம் 2018ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, இந்த ஆற்றில் நீர் பெருக்கெடுப்பதால் இங்கு வாழும் மக்கள் பல துயரங்களை சந்திக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள், நோயாளர்கள், தொழிலுக்கு செல்பவர்கள், வெளியிடங்களுக்கு செல்பவர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

> **2018ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால், இந்தப் பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அடிக்கடி மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, இந்த ஆற்றில் நீர் பெருக்கெடுப்பதால் இங்கு வாழும் மக்கள் பல துயரங்களை சந்திக்கின்றனர்**

சிலர் தவறியும் விழுந்துள்ளனர். பாலத்தை புனரமைத்துத் தருமாறு அரசியல்வாதிகளிடம் பலமுறை கோரிக்கைகள் விடுத்த போதிலும், இதுவரை பாலத்தை புனரமைத்துத் தருவதற்கு எவரும் முன்வரவில்லை என இத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக, இவர்களின் முயற்சியால் பலகைகளைக் கொண்டு தற்காலிக பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக பாலத்தினை புனரமைப்பு செய்து தருமாறு, பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக இளைஞர்களின் சுயதொழிலை ஊக்குவிக்க

# பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

## ஜீவன் எம்.பி வலியுறுத்து

■ ஆ.ரமேஸ்

மலையகத்தில் இளைஞர், யுவதிகளின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக, பால் உற்பத்தியை அதிகரிப்பது இளைஞர்களின் வேலையற்ற பிரச்சினைக்கு தீர்வாக அமையுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டன், கமுகுவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள (ரொத்தர்ஸ் பார்ம்) தனியார் பாற் பண்ணைக்கு விஜயம் செய்த அவர், பண்ணை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி தொடர்பாக பார்வையிட்ட பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை



பரப்புரையில் கீழ், எதிர்காலத்தில் பால் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பான தூரநோக்குக்கு அமைய தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

மேலும் மலையகத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் சுயத்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக, பால் உற்பத்தியை அதிகரிப்பது இளைஞர்களின் வேலையற்ற பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

அதுமாத்திரமன்றி, தேசிய நீரோட்டத்துக்கு அதிகளவிலான பால் உற்பத்தியை மேற்கொள்வதற்கும், மலையக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் இதனூடாக செயற்படுத்தப்படவுள்ளது என்றார்.

# ஹக்கல விபத்தில் மூவருக்கு காயம்



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹக்கல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான மூவர், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவை பகுதியிலிருந்து வெலிமடை நகருக்கு அரிசி ஏற்றி வந்த லொறி, வீதியை விட்டு விலகி நேற்றுமுன்தினம் இரவு (04) விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

லொறி வேக கட்டுப்பாட்டை இழந்தமையால் இந்த விபத்து நேர்ந்துள்ளதுடன், இதனால் வீடொன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் லொறியின் சாரதியும் உதவியாளர் இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்த நுவரெலியா பொலிஸார், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.







# விசேட விழிப்புணர்வு

பொலிஸ் சேவையின் 156 ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி, கிறேட்வெஸ்டன் பாடசாலையில், தலவாக்கலை பொலிஸ் நிலையத்தின் ஊடாக விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (ய5) மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் தலவாக்கலை பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் பெரியசாமி, பொலிஸ் உத்தியோகத்தர் யோகரட்ணம், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். (பி. கேதீஸ்)



அச்சுறுத்தல்களிலிருந்து விலங்குகளை மீட்க

# உபகரணங்கள் வழங்கப்பட்டன

■ பி.கேதீஸ்

சிறுத்தைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து அவற்றை வெற்றிகரமாக மீட்பதற்காக, மத்திய வனவிலங்கு வலயத்தின் வன ஜீவராசி பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு மேலதிக உபகரணங்களை வழங்க வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, ஹக்கல, நல்லதண்ணி, கம்பளை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களங்களுக்கு மேலதிக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மலைகளில் வசிக்கும் சிறுத்தைகள், பொறிகளில் சிக்கிக்கொள்ளும்போதும் மற்றும் பிற ஆபத்துகளிலும் பாதிக்கப்படும் போதும் வனவிலங்கு அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெற்றிபெறும் வகையில் மத்திய வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகங்களுக்கு இந்தச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.




# மலையக மக்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்

தென்மாகாண சிவில் சமூக அமைப்பின் ஊடாக காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளில், உயர்தரத்தை கற்று வருகின்ற 15 மாணவர்களுக்கு 'மலையக மக்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்' எனும் வேலை திட்டத்தின் கீழ் கல்விப் புலமைப்பரிசில் தொகை வழங்கப்பட்டது.

தெனியாய கொடசெப் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்திரு என்டனி ஜேசுதாசன்




அடிகளார் தலைமையில் இந்தப் புலமைப்பரிசில் தொகை நேற்று (05) வழங்கப்பட்டது. (ராமு தனராஜா)

# வில்பிரட்புர வீதி புனரமைப்பு

■ சுதத். எச்.எம்.ஹேவா

ஹட்டன், வில்பிரட்புர பகுதியில் பொலிஸாரின் வீடுகள் அமைந்துள்ள ஒழுங்கைக்கு, கொன்கிறீட் இடப்பட்டு, புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஹட்டன்- டிக்கோயா நகர சபையால் இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நகர சபையின் நிதியிலிருந்து 1. 3 மில்லியன் ரூபாய் நிதி செலவில் குறித்த வீதியை புனரமைக்கப்படுவதாக ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன்

> **ஹட்டன், வில்பிரட்புர பகுதியில் பொலிஸாரின் வீடுகள் அமைந்துள்ள ஒழுங்கைக்கு, கொன்கிறீட் இடப்பட்டு, புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஹட்டன்– டிக்கோயா நகர சபையால் இந்தப் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன**

தெரிவித்துள்ளார்.

அந்த வீதி, புனரமைப்பு செய்யப்படாமையால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிய நிலையில், பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைய இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கொஞ்சம் கவனம் செலுத்துமாறு பாதிக்கப்பட்ட குடும்பம் கோரிக்கை

■ துவாரகஷான்

மலைகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக, மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஓகஸ்ட் 3ஆம் திகதியன்று பெய்த கடும்மழையால் மெராயா கேம்ரி மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள தனி குடியிருப்பின் பின்பக்கமாக மண்மேடு சரிந்து விழுந்தது. இதனால், சமையலறை, மலசலக்கூடம் சுயதொழில் திட்டமாக முன்னெடுக்கப்பட்ட கோழிக் கூடு உள்ளிட்டவை மூடுண்டன. அத்துடன், ஒரு குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் பாதிப்புக்கு உள்ளாகினர்.

ஒரு மாதம் கடந்த போதிலும், சரிந்துவிழுந்த மண்ணை அப்புறப்படுத்துவதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அத்துடன், பாதிக்கப்பட்ட அந்த நால்வரும் அதே வீட்டிலேயே தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நுவரெலியா பிரதேச

> **ஓகஸ்ட் 3ஆம் திகதியன்று பெய்த கடும்மழையால் மெராயா கேம்ரி மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள தனி குடியிருப்பின் பின்பக்கமாக மண்மேடு சரிந்து விழுந்தது. இதனால், சமையலறை, மலசலக்கூடம் சுயதொழில் திட்டமாக முன்னெடுக்கப்பட்ட கோழிக் கூடு உள்ளிட்டவை மூடுண்டன. அத்துடன், ஒரு குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் பாதிப்புக்கு உள்ளாகினர்**

செயலகத்தில் கோரிக்கை மனுவொன்றை கையளித்துள்ள போதிலும் எவரும் அது தொடர்பான நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பத்தை சார்ந்தவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மேலும் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அச்சத்துடனே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை– கொழும்பு ரயில் சேவையை

## மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

■ ஜலீல்

கொரோனா பரவலையடுத்து, இடைநிறுத்தப்பட்ட மாத்தளை-கொழும்பு ரயில் சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ரயில் சேவையானது, தினமும் காலை 6.50க்கு மாத்தளை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, கொழும்பு வரை சேவையில் ஈடுபட்டது. இந்த ரயில் சேவையால் பயணிகள் பெரும் நன்மையடைந்து வந்த நிலையில், கொவிட் பரவலால் இந்த ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டது.

எனினும், கடந்த இரண்டு வருடங்களாக இச்சேவை மீள ஆரம்பிக்கப்படாமையால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே, பயணிகளின் நன்மைகருதி, மீண்டும் இந்த ரயில் சேவையை ஆரம்பிக்குமாறு சுதந்திரக் கட்சியின் உக்குவளை, மாருகொன கிளை தலைவரும் சமூக ஆர்வலருமான சாஹுல் ஹமீட் சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக் கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ளார்.

# ‘யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால், எல்லாம் சௌக்கியமே’

இலங்கை அரசியல் வரலாற்றில், மக்கள் கிளர்ச்சி மூலம் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டு, நாட்டை விட்டோடிய முதல் ஜனாதிபதி என்ற நகைப்புக்குரியவராக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியமை, அரசியலாக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய சம்பவங்களாகவே பார்க்கப்பட வேண்டும்.

‘கோட்டாவே வீட்டுக்குப் போ’ என்பதாகவே போராட்டக்காரர்களின் கோரிக்கை இருந்ததே தவிர, கோட்டாவை நாட்டை விட்டு ஓடிப்போ என்பதாக இருக்கவில்லை. எனவே, கோட்டா நாடு திரும்பியமை இங்கு ஒரு பொருட்டல்ல; ஆனால், மக்களால் வெறுக்கப்பட்டு, அதன் பின்னணியில் நாட்டை விட்டு ஓடிப்போன ஒருவரை, செங்கம்பள வரவேற்பு அளிப்பது போல், வரவேற்று அழைத்து வருவது என்பது, தந்திர அரசியலே அன்றி, வேறொன்றில்லை.

மாலைதீவு, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில், கோட்டாபய அடைக்கலம் அடைந்திருந்தார். இந்த நாடுகள், தற்காலிகமாகத் தங்குவதற்கான அனுமதியையே வழங்கியிருந்தன. நீண்டகால அடிப்படையில் தங்குவதற்கான கோரிக்கையை மறுத்திருந்தன.

மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ஒரு தலைவர், தமது நாட்டில் தங்குவதால், தமது நாட்டுக்கு அது அவமானமெனக் கருதியிருக்கக் கூடும். அத்துடன், தத்தமது நாட்டில் வாழும் இலங்கையர்களால், போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம்; அது, தமது நாட்டின் சமூக வாழ்க்கையைப் பாதித்துவிடும் என்று கருதியும் மறுத்திருந்திருக்கலாம்; இவை அவதானத்துக்குரியவை.

கோட்டாபய சார்பானவர்கள் கூறுவது போன்று, இன்று நாடு திரும்பியிருக்கும் கோட்டாபயவால், நாட்டுக்கோ மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. இவர்கள், கோட்டாபயவை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தும்போதும், பசிலை தேசிய பட்டியல் எம்.பியாக்கி நிதி அமைச்சராக்கும் போதும் இவ்வாறுதான் கூறினார்கள்.

இன்னொருபுறம், வரலாறு காணாத வரிசைகளுக்கும் பலர் வேலையிழந்து, பட்டினியுடன் நடுத்தெருவுக்கு வருவதற்கும் காரணமான ஓர் ஆட்சித் தலைவராக, மக்கள் கண்முன்னால் தெரியும் ஒருவரை, மீண்டும் மக்கள் முன்னால் நிறுத்தி, அவரை ஒரு முன்னாள் ஜனாதிபதியாக கௌரவப்படுத்துவதன் மூலம், ராஜபக்ஷர்கள் மீது படிந்திருக்கும் கறைகளைத் துடைப்பதற்கு முயலப்படுகிறது.

இதனால்த்தான், கோட்டாபயவின் வருகையை அடுத்து கருத்துரைத்த மஹிந்த ராஜபக்ஷ, “ராஜபக்ஷர்கள் தோற்கவும் இல்லை; தோற்கடிக்கப்படவும் இல்லை. சுயமாகப் பதவிகளிலிருந்து விலகிய அவர்கள், விரைவில் மீளெழுச்சி பெறுவார்கள். உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சிகளால், ராஜபக்ஷர்களின் அரசியலுக்கு முடிவு கட்ட முடியாது” எனக் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, “நாடு திரும்பியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, அரசியலில் தலையீடுகளை மேற்கொண்டாலோ, பதவிகளை பெற்றுக் கொண்டாலோ மீண்டும் போராட்டங்கள் வெடிக்கும்” என காலி முகத்திடல் போராட்டக்கார்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

எனவே, கோட்டாபயவை மீண்டும் அரசியலுக்குள் அழைத்து வருவது, நெருக்கடிகள், குழப்பங்களையே ஏற்படுத்தும். இவை, நாட்டை சமூக நிலைக்குக் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பங்கள், முயற்சிகளை முற்றாக இல்லாமல் செய்துவிடும்.

எனவே, மக்கள் காதில் பூச்சுற்றுவதை நிறுத்திவிட்டு, கோட்டாபய அரசியலில், அதிகாரத்தில் இருந்து ஒதுங்கி, ‘யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால், எல்லாம் சௌக்கியமே’ என்பது போல் இருப்பதே அவருக்கு நிம்மதி; முக்கியமாக, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதை வலியுறுத்துகின்றோம்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.





அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# கோட்டாவின் மீள்வருகையும் குழம்பிய குட்டையும்

மொஹமட் பாதுஷா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளமை, இலங்கை அரசியலில் இன்னுமொரு திருப்பத்தை ஏற்படுத்த வழிகோலுமா என்ற கேள்வி, எழுந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்கள் கிளர்ச்சி வெடித்ததை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, மாலைதீவுக்கும் அங்கிருந்து சிங்கப்பூருக்கும் பின்னர் தாய்லாந்துக்கும் ஓடித் தப்பியிருந்தார்.

இப்போது 50 நாள்களின் பின்னர், நாடு திரும்பிய அவர் வரவேற்கப்பட்டு, வாகனத் தொடரணியாக அழைத்து வரப்பட்டிருக்கின்றார். இது ராஜபக்ஷர்களும் மொட்டு அணியும் மீள்எழுச்சி பெறுவதான தோற்றப்பாட்டையும், குழம்பிய அரசியல் குட்டைக்குள் என்ன நடக்குமோ என்ற நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

‘கோட்டா வீட்டுக்குப் போ’ ஆர்ப்பாட்டம் உச்சம் தொட்டிருந்த காலத்தில், ராஜபக்ஷவினர் மட்டுமன்றி அவர்களுக்கு ஆதரவளித்த எல்லோருமே ஓடி ஒளிந்திருந்தனர். ‘ஆளைவிட்டால் போதுமடா சாமி’ எனப் பின்கதவால் கோட்டாபய தப்பி ஓடியபோது, அவரைக் காப்பாற்றவோ அவருக்குப் பரிந்து பேசவோ, யாராலும் வாயைத் திறக்க முடியாத நிலை இருந்தது.

அதேபோல், ராஜபக்ஷ சார்பு அணியினரும் குறிப்பாக, பொதுஜன பெரமுன கட்சியினர், ஓர் அறிக்கையைக் கூட பகிரங்கமாக வெளியிட முடியாத அளவுக்குப் புறமொதுக்கப்பட்டு இருந்தனர். முன்பின் தெரியாத ஆர்ப்பாட்டக்கள செயற்பாட்டாளர் ஒருவருக்கு இருந்த சமூக அங்கிகாரம் கூட, இவர்களுக்கு இல்லாதிருந்தது.

இருப்பினும், ஏதோ ஒரு வகையில் ராஜபக்ஷர்கள் சார்பு அரசியல், மீள்எழுச்சி பெற்று வருவதான தோற்றப்பாடு ஏற்படுமளவுக்கு, உள்நாட்டுக் களநிலைமைகள் கடந்த ஒன்றரை மாதத்துக்குள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மிகப் பொருத்தமாகச் சொல்வதென்றால், திட்டமிட்டு இந்தக் சூழமைவுகள் மாற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், கோட்டாபயவுக்காக எம்.பி பதவியை இராஜினாமாச் செய்வோம் என்று கூறுவது ஒருபுறமிருக்க, பிரதமராக்குவோம் என்கின்ற அளவுக்கு கருத்துகள் முன்வைக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

இந்தக் களநிலையை சாதகமாக மாற்றுவதற்காக, இரண்டு விடயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது, மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், தணியச் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது, காலவோட்டத்தில் மக்கள் மறந்து விடுவார்கள் என்ற நியதி பரீட்சிக்கப்பட்டு இருக்கின்றது.

‘கோட்டா வீட்டுக்குப் போ’ போராட்டம் உருவானதற்கான காரணத்தை மட்டுமன்றி, அதற்குப் பின்னால் இருந்த சக்திகளையும் ஜனாதிபதி ரணில் நன்கு அறிந்திருந்தார். அவரை ஆதரித்த சில நாடுகளும் ஆர்ப்பாட்ட முன்னெடுப்புகளில் செல்வாக்குச் செலுத்தின.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான கையோடு, ஓரிரு வெளிநாடுகள் ஒதுங்கிக் கொண்டன என்றுதான் தோன்றுகின்றது. பெரும்பாலும் எந்தப் பின்னணியும் இல்லாத தரப்பினரும், ஜே.வி.பி கொள்கையுடன் தொடர்புபட்டவர்களும்தான் தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் சோபையிழந்து போகத் தலைப்பட்ட ஒரு கட்டத்தில், ரணிலையும் வீட்டுக்குப் போகுமாறு கோரினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி ரணில் ஒரு கணக்குப் போட்டிருக்க வேண்டும். அதாவது, மக்களது நெருக்கடிகளுக்குக் காரணமான அடிப்படை விவகாரங்களுக்குத் தீர்வு கண்டால், மக்கள் வீதிக்கு வரமாட்டார்கள் என்பதுதான் அந்த மனக்கணக்காகும்.

அதன்படி, மக்கள் எழுச்சிக்கு அடிப்படைக் காரணமான எரிபொருளையும் எரிவாயுவையும் வழங்கியதன் மூலம், மக்களிடத்தில் போராட்ட மனோநிலையை துரத்தும் திட்டம் வெற்றி பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தனக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருந்த போராட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் ஆப்படித்தார். சட்டத்தை ஏவி விட்டும் ஆர்ப்பாட்டம் ஒடுக்கப்பட்டது. வெளிநாடுகள் தமது மறைகரத்தை ஒதுக்கிக் கொண்டதாலும் சாதாரண மக்கள் ஒதுங்கிக் கொண்டதாலும், இதனை செய்வது ரணிலுக்கு அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கவில்லை.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு வருவதை, ஜனாதிபதி ரணில் விரும்பினாரா, அதற்கு ஒத்துழைத்தாரா என்பது, விவாதிக்கப்படுகின்ற விடயமாகும்.

பெருந்தேசிய கட்சி சார்பான எல்லா ஆட்சியாளர்களும், ஒருவரை ஒருவர் பொதுவெளியில் விமர்சித்தாலும், நிஜத்தில் பரஸ்பரம் மற்றவரைக் காப்பாற்றும் விதத்திலான ஆட்சியையே, கடந்த காலத்தில் நடத்தியிருக்கின்றனர்.

இதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல! ராஜபக்ஷர்களை காப்பாற்றும், அவர்களின் மாறுவேடமணிந்த ஆட்சியாளராகவே விக்கிரமசிங்க இருப்பார் என்பது அனுமானிக்கப்பட்ட விடயம்தான்.

ஆனால், ராஜபக்ஷர்களை பகைக்காத அரசியல் நிலைப்பாட்டை ரணில் எடுத்தமைக்கு, வெளிப்படையாக ஒரு காரணமிருந்தது. அதாவது, ஐ.தே. கட்சியில் ஒரேயோர் எம்.பி ஆசனமே இருந்த நிலையில், நாடாளுமன்ற பலம் பொதுஜன பெரமுனவிடம் இருந்தது. அவர்களில் பெரும்பான்மையானவர்கள், ராஜபக்ஷவினரின் ஏவலுக்கு இயங்குபவர்களாக இன்னும் இருக்கின்றார்கள். எனவே, எதிரணி உள்ளிட்ட ஏனைய தரப்புகளும் முன்வராத சூழ்நிலையில், மொட்டுவின் ஆதரவை, ரணில் சரிவரப் பயன்படுத்தியிருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில், மிகக் கிட்டிய காலத்தில், ‘இந்தப் பக்கம் வரவே மாட்டார்’ எனக் கருதப்பட்ட கோட்டாபய, மிகப் பகிரங்கமாக நாடு திரும்பியுள்ளார்.

ராஜபக்ஷர்களின் அதிகார வேட்கை, இன்னும் தீரவில்லை. அவர்கள் வேறு வழியில்லாத ஒரு கட்டத்திலேயே, தன்னை ஒரு ‘போடுகாயாக’ உபயோகிக்க முனைகின்றார்கள் என்பதையும் ஜனாதிபதி ரணில் நன்கு அறிந்து வைத்திருப்பார்.

முன்னாள் ஜனாதிபதிக்காக, சீதா அரம்பேபொல தனது தேசிய பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமாச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கும் நகர்வொன்றைச் செய்து விட்டு, பிரதமர் தினேஸ் குணவர்தனவை (பெயரளவில்) ஜனாதிபதியாக்கி விட்டு, கோட்டாவை அதிகாரங்கள் குவிக்கப்பட்ட பிரதமர் கதிரையில் அமரவைக்கும் திட்டங்களும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

உண்மையில், ராஜபக்ஷர்களின் ஆதரவுடனும் மறைமுகத் திட்டத்துடனுமே ரணில் இந்த அதிகாரத்துக்கு வந்திருந்தால், அதாவது தற்காலிகமாக அவர்களே இவரிடம் இவ்வதிகாரத்தை ஒப்படைத்திருந்தால், ரணில் இதைப் பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்; அல்லது, எதிர்த்தாட வேண்டும். ஆனால், எதிர்த்தாடுவதற்கான நாடாளுமன்ற பலம் ஜனாதிபதியிடம் இல்லாதிருப்பது பெரும் சவாலாகும்.

இந்தக் கோணத்தில் நோக்கினால், கோட்டாவின் வருகையை, ரணில் மனப்பூர்வமாக விரும்பியிருக்கமாட்டார் என்று கருதலாம். அவ்வாறாயின், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அவசரப்பட்டு ஆப்படித்து விட்டோமா, என்று அவர் கவலைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், ஜனாதிபதியோ அரசாங்கமோ மீண்டும் ஒரு போராட்டத்துக்கான ஏது நிலைகளை தோற்றுவிக்காது. ஏனெனில், இப்போது எந்தப் போராட்டம் வந்தாலும் அது ‘மக்கள் போரட்டம்’ என்ற தோற்றப்பாட்டை எடுக்காது. குழுக்கள், அரசியல் செயற்பாட்டாளர்களின் கோசங்களாகவே பார்க்கப்படும்.

அதேபோல், அரசாங்கத்துக்கு எதிராகப் போராடியவர்கள், தடாலடியாக கைது செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், இன்னுமொரு போராட்டம் மிக இலகுவில் சாத்தியப்படக் கூடியதல்ல. அப்படி ஒன்று மேலெழுந்தால், அது ஜனாதிபதிக்கும் எதிரானதாகவே இருக்கலாம் என்பதையும் ரணில் விக்கிரமசிங்க அறியாதிருக்க மாட்டார்.

கோட்டாவின் மீள் வருகையால், மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று கருத முடியாது. ஆனால், அதிகாரத்துக்கான குழிபறிப்புகளும் கயிறிழுப்புகளும் சகஜமாக நடந்தேறும்.

கோட்டாபய இப்போதும் அரசியலில் இருக்கின்றார்; அரசியல் செய்து கொண்டும் இருக்கின்றார். அவருக்குச் சாதகமான, பாதுகாப்பான களநிலைமைகள் நாட்டில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தாமல் திரும்பி வந்திருக்கவும் மாட்டார்.

கோட்டாபயவின் வருகை, இலங்கை அரசியலில் சில விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பது வெளிப்படையானது. ஆனால், உடனடியாக அவர் பிரதிநிதித்துவ அரசியலுக்கு வரமாட்டார். ஆனால், எம்.பியாக வருவதற்கு வெட்கப்படுவார் என்று கருத முடியாது.

அதற்கிடையில், நிலைமைகளை அருகிலிருந்து நோக்குவதுடன் சகோதரர்கள் மற்றும் மொட்டு அணியுடன் இணைந்து நகர்வுகளைச் செய்ய வாய்ப்புள்ளது. அப்படி நடந்தால் பெரும்பாலும் இது கோட்டபாய - ரணில் பனியுத்தமாக அல்லது சிலவேளை கோட்டா-மஹிந்த-ரணில் மும்முனை நகர்வாக அமையலாம்.

எது எப்படியாயினும், இவ்வாறான அரசியல் குழப்பங்கள் மீண்டும் தலையெடுக்குமாயின், யாருக்கு அதன்மூலம் அரசியல் இலாபம் கிடைத்தாலும், அது, நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் நெருக்கடி நிலைக்கு இறங்குமுகமாகவே இருக்கும். இதற்கான விலையை மக்களே தொடர்ந்து செலுத்த வேண்டிய நிலையும் உருவாகும்.



## வாழ்வியல் தரிசனம்

நீதிக்கான போராட்டங்களைக்கூட, அரசாங்கங்கள் கண்டுகொள்வதில்லை. எந்தவோர் அரசாங்கமும் பதவியைப் பிடிப்பதற்கு, பல்வேறு வழிகளைத் தேடுவார்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கும்போது, காட்டும் ஆர்வம், அரசாங்கத்தைக் கைப்பற்றியதும் கொடுத்த வாக்குறுதிகள், புஷ்வாணமாகி விடுகின்றன. இவை ஜனநாயக நாடுகளில் நடக்கும் விடயங்களாகும்.

பொது அமைப்புகளின் போராட்டங்கள் வேறானவை. கட்சி, மதம், மொழி சாராத சுயாதீன அமைப்புகளே, பொது அமைப்புகளாக எடுத்துக்கொள்ளத் தக்கவை. இவற்றின் போராட்டம், உண்மைத்தன்மையுடன் இயங்கினால் அவை காத்திரமானவையாக அமையும்.

மக்கள் கேட்காமலேயே எந்த நன்மையும் கிடைப்பது அபூர்வம். கேட்டும் கொடுக்காமல் காலம் கடத்துவது, இயற்கையான செயற்பாடாகி விட்டது.

தேர்தல் வரும்போது எல்லாக் கட்சிகளும் மக்களின் தொண்டர்களாகி விடுகின்றன. எங்கள் நாடு பரிதாபத்துக்குரியது. முக்கியமாக சிறுபான்மை மக்களின் கதி என்ன?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### காட்டு யானைகள் அட்டகாசம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கிறீன்ட் பீல்ட் தொடர்மாடி குடியிருப்பு பகுதியில், வியாழக்கிழமை (01) காட்டு யானைகள் உள்நுழைந்து கல்முனை சமூர்த்தி வங்கி சுற்றுபுற வேலி, ரோயல் வித்தியாலத்தின் சுற்றுபுற வேலி என்பவற்றைச் சேதப்படுத்தியுள்ளன.

கல்முனை மாநகர சபையால் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள், கீறின் பில்ட் மக்கள் குடியிருப்பு பகுதியை அண்மித்த வயல்வெளியில் கொட்டப்படுவதாகவும், அதை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றும் நடவடிக்கை இடம்பெற்றுவரும் இந்நிலையில், இந்தத் திண்மக்கழிவுகளை உண்பதற்காக காட்டு யானைகள் இரவு நேரங்களில் வருகை தருவதாக, பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைக்காலம் என்பதால், டெங்கு நோய் உள்ளிட்ட சுவாச நோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதுடன், இந்தக் காட்டு யானைகளின் வருகையால் உயிருக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

எனவே, இப்பிரச்சினைக்கு சுகாதார வைத்திய அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் ஆகியோர், பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, உடனடி நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பைஷல் இஸ்மாயில்



# ரசிகர்களை கவர்ந்த புன்னகை அரசி



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகைகளில் ஒருவராக திகழ்ந்தவர் நடிகை சினேகா. தனது சிரிப்பால் ரசிகர்களை மயக்கி இவர் ரசிகர்களின் மத்தியில் புன்னகை அரசி என்று செல்லமாக அழைக்கப்பட்டு வருகிறார்.

நடிகர் பிரசன்னாவை காதல் திருமணம் செய்து கொண்ட சினேகா இரண்டு குழந்தைகளை பெற்றெடுத்த பின் குடும்ப வாழ்க்கையில் செட்டில் ஆகிவிட்டார்.


குழந்தைகள் பிறந்த பிறகு குண்டாக மாறி இருந்த சினேகா தற்போது உடல் எடையை குறைத்த பிறகு மற்ற நடிகைகளை போல் இவரும் தனது சமூக வலைதள பக்கத்தில் விதவிதமான போட்டோ ஷூட் புகைப்படங்களை அவ்வப்போது பதிவிட்டு கொண்டிருக்கிறார்.

அந்த வகையில் இவர் தற்போது வெளியிட்டு இருக்கும் புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் 'எவர் கிரீன் சினேகா' என்று அவரது புகைப்படங்களை ரசித்து கருத்து பதிவு செய்து வருகின்றனர்.

> **தற்போதைய புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள், 'எவர் கிரீன் சினேகா' என்று ரசித்து பதிவு செய்கிறார்கள்**

ஈரோடு

# கருணாநிதி படத்தால் சர்ச்சை



மத்திய அரசு நிதியில் வழங்கப்படும் விற்பனை வண்டியில், முன்னாள் முதலமைச்சரின் படம், இந்தி மொழியில் இடம் பெற்றிருப்பது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு மாநகராட்சி பகுதியில், சாலையோரங்களில் கடை அமைத்து பூ, காய்கறி, பழங்கள், உணவு வகை விற்பனை செய்வோர், கடையை எளிதில் நகர்த்தி சென்று விற்பனை செய்ய வசதியாக, விற்பனை வண்டி திட்டம் அமல்படுத்தப்பட்டது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், இந்த வண்டி தயாரிப்புக்கான தொகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இதற்காக மாநகராட்சிக்கு, 1.05 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

முதற்கட்டமாக அமைச்சர் முத்துசாமி, 40 விற்பனை வண்டிகளை பயனாளிகளுக்கு மே 30ஆம் திகதி வழங்கினார். தற்போது மேலும், 83 விற்பனை வண்டிகள் பயனாளிகளுக்கு வழங்க, மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த வண்டிகளில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் ஆகியோரின் படம் இடம் பெற்றுள்ளது. மேலும் ஹிந்தியில், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிக் பாஸ் சீசன் 6 புதிய ப்ரோமோ

தமிழ் சின்னத்திரையில் விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் பிரபலமான நிகழ்ச்சி பிக் பாஸ். இந்த நிகழ்ச்சியில் ஐந்தாவது சீசன் முடிவடைந்ததை தொடர்ந்து ஆறாவது சீசன் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

கமல்ஹாசன் தொகுத்து வழங்க உள்ள இந்த நிகழ்ச்சியில் போட்டியாளர்களாக பங்கேற்க போவது யார் என்று எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எக்கச்சக்கமாக எழுந்துள்ளது.

மேலும் இந்த சீசனில் சாதாரண சாமானிய மக்களும் போட்டியாளர்களாக பங்கேற்கலாம் என்று அறிவிப்பு வெளியாகி இருந்தது.

இப்படியான நிலையில் தற்போது இந்த நிகழ்ச்சி புதிய சீசனின் லோகோ குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. இது குறித்த வீடியோ வெளியாகி ரசிகர்களை கொண்டாட்டத்தில் ஆழ்த்தியுள்ளது.

# அதிர்ச்சி கொடுத்த தனுஷ்



திருச்சிற்றம்பலம் படத்தின் வெற்றியை தொடர்ந்து தனுஷ் அவரின் சம்பளத்தை உயர்த்தியதாக கூறப்படுகிறது.

தனுஷ் நடிப்பில் அடுத்தடுத்து தமிழில் ஜெகமே தந்திரம், மாறன், ஹிந்தியில் அந்த்ராங்கி ரே மற்றும் ஹொலிவுட்டில் தி கிரே மேன் ஆகிய படங்கள் வெளியாகி கலவையான விமர்சனங்கள் பெற்றன.

தற்போது திருச்சிற்றம்பலம் படம் வெளியாகி முந்தைய படங்களை விட அதிக வரவேற்பு பெற்று வசூலை குவித்து வருகிறது.

இதுவரை ரூ.20 கோடி சம்பளம் வாங்கி வந்த தனுஷ் திருச்சிற்றம்பலம் படத்தின் வெற்றியால் அடுத்து நடிக்க உள்ள புதிய படங்களுக்கு ரூ.30 கோடி சம்பளம் கேட்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவரிடம் சம்பளத்தை குறைக்கும்படி தயாரிப்பாளர்கள் நிர்ப்பந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

# இரண்டு பாகங்களாக 'விடுதலை'



வெற்றிமாறன் இயக்கும் 'விடுதலை' திரைப்படம் இரண்டு பாகங்களாக வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விஜய்சேதுபதி - சூரி முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்க, வெற்றிமாறன் இயக்கத்தில் 'விடுதலை' படம் உருவாகிவருகின்றது.

விடுதலை- பாகம் 1 இன் படப்பிடிப்பு முழுமையாக முடிந்த நிலையில் போஸ்ட் புரொடக்சன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

சென்னை



# 'விக்ராந்த்' போர்க்கப்பலை சென்னையில் நிறுத்த ஏற்பாடு

'மேக் இன் இந்தியா' திட்டத்தில் முழுக்க, முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே கட்டப்பட்ட 'ஐ.என். எஸ். விக்ராந்த்' விமானம் தாங்கி போர்க்கப்பலை கேரள மாநிலம் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார். இந்தக் கப்பல் விசாகப்பட்டினத்தை தலைமை இடமாக கொண்டு செயற்படும் கிழக்கு மண்டல கடற்படையை சார்ந்தது.


262 மீற்றர் நீளம், 62 மீற்றர் அகலம் கொண்ட விக்ராந்த் போர்க்கப்பல் விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நிறுத்துவதற்கு போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை. இதனால் அந்தக் கப்பல், சென்னையை அடுத்த காட்டுப்பள்ளியில் உள்ள 'எல் அண்டு டி' கப்பல் கட்டும் தளத்தில் நிறுத்தப்பட உள்ளது.

விக்ராந்த் போர்க்கப்பலை காட்டுப்பள்ளி துறைமுகத்தில் நிறுத்துவது தொடர்பாக கடற்படை அதிகாரிகள் கடந்த சில ஆண்டுகளாகவே பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். காட்டுப்பள்ளி துறைமுகம் போர்க்கப்பல்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டதாக, கடற்படை தரப்பில் இருந்து 2020ஆம் ஆண்டு பாதுகாப்பு குழுவிடம் அறிவிக்கப்பட்டு இருந்தது.

> **262 மீற்றர் நீளம், 62 மீற்றர் அகலம் கொண்ட விக்ராந்த் கப்பல் விசாகப்பட்டினத்தில் நிறுத்துவதற்கு போதுமான கட்டமைப்பு வசதிகள் இல்லை. இதனால் சென்னையில் நிறுத்தப்பட உள்ளது**

ஈரோடு

# ஒரு ரூபாய்க்கு ஒருவேளை சாப்பாடு



'ஒரு ரூபாய்க்கு ஒருவேளை சாப்பாடு'. இதைப் படித்ததும் ஏதோ ஆடி மாதம் தள்ளுபடி விற்பனை போல தோன்றுகிறதா? கடந்த 15 வருடங்களாக இந்தச் சேவையை செய்து வருகிறார் ஈரோட்டைச் சேர்ந்த வெங்கட்ராமன். இதை அறிந்த ஸ்டாலின் அவரை 'ட்விட்டர்' பக்கத்தில் பாராட்டி இருக்கிறார்.

இன்றைக்கு உள்ள விலைவாசி உயர்வில் ஒரு ரூபாய்க்கு மதிய சாப்பாடு என்பது எப்படி சாத்தியம்? வெங்கட்ராமன் கூறுகின்றார். "அது எல்லாம் ஒரு பெரிய விஷயம் இல்லைங்க. மனசு இருந்தா செய்யலாம். நாங்க ஒண்ணும் தனியா இவங்களுக்காக சமைக்கவில்லை. ஹோட்டல் வேலைக்கு ஆள்கள் இருக்காங்க. அவங்களுக்கு சமைக்கும்போதே சேர்த்துச் சமைக்கிறோம். பொருளாதார ரீதியா கொஞ்சம் கஷ்டம்தான். நீங்க கேட்பது புரிகிறது. ஆனாலும் சமாளிக்கிறோம்" என்கிறார்.

ஈரோடு அரசு மருத்துவமனை அருகே இந்த உணவகம் நடந்து வருகிறது. இங்கே வரும் வாடிக்கையாளர்கள் பலர் நோயாளிகளின் உறவினர்கள். அதுவும் கிராமப்புற பகுதிகளிலிருந்து வருபவர்கள். ஏழை எளிய மக்கள். இவர்களின் நிலையை உணர்ந்து இந்த உன்னதமான சேவையைச் செய்து வருகிறார் இவர்.

"பணம் ஒரு விஷயம்தாங்க. ஆனால் அதைவிட மக்கள் முக்கியம். மக்களுக்கு உதவுவது பெருமை இல்லை. அது மனுஷனோட கடமை. அவங்களுக்கு கல்யாணமாகிடுச்சு. நானும் மனைவியும் மட்டும்தான்" என்றார்.

# சிதம்பரனார் இழுத்த செக்குக்கு மரியாதை




இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது சிறையில் அவரை சித்திரவதை செய்யும் நோக்கில், செக்கு இழுக்க வைக்கப்பட்டார். அவர் இழுத்த செக்கு அங்கு உள்ள சிறை வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வ.உ.சிதம்பரனாரின் 151ஆவது பிறந்த நாள் விழா கோவை மத்திய சிறையில் நேற்று (05) காலை நடைபெற்றது. இதையொட்டி வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு, அவருடைய மார்பளவு சிலை, உருவப்படம் பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது. இதில் அமைச்சர் செந்தில் பாலாஜி கலந்துகொண்டு வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு மற்றும் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

> **வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது சிறையில் அவரை சித்திரவதை செய்யும் நோக்கில், செக்கு இழுக்க வைக்கப்பட்டார். அவர் இழுத்த செக்கு அங்கு உள்ள சிறை வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது**

# திருப்பிக் கொடுத்த விஜய்







பிரபல தெலுங்கு நடிகர் விஜய் தேவர்கொண்டா நடித்த 'லைகர்' திரைப்படம் படுதோல்வி அடைந்து, படக்குழுவினர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்பாக இந்தப் படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான நடிகை சார்மிக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கரன் ஜோகர், பூரி ஜெகன்நாத் ஆகியோரும் இந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் என்றாலும் சார்மிக்கு மிகப்பெரிய நஷ்டம் என்று என்று தெரிகிறது.

சிம்புவின் 'காதல் அழிவதில்லை' படத்தில் அறிமுகமாகி அதன்பின் ஒருசில தமிழ் படங்களிலும் ஏராளமான தெலுங்கு படங்களிலும் நடித்து அவர் கடந்த பல வருடங்களாக சேர்த்து வைத்த பணத்தை மொத்தமாக இதில் இழந்துவிட்டார் என்றும் கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 'லைகர்' பட தோல்வியால் அதிர்ச்சியில் இருந்த சார்மிக்கு ஆறுதல் கூறும் வகையில், தான் வாங்கிய சம்பளத்தில் ஒரு பெரும் பகுதியை, நடிகர் விஜய் தேவரகொண்டா திருப்பி கொடுத்து விட்டதாக கூறப்படுகிறது.

விஜய்தேவரகொண்டா தனது சம்பளத்தின் பெரும்பகுதியை திருப்பிக் கொடுத்து விட்டதால் நஷ்டம் ஓரளவு குறையும் என்று தெரிகிறது.

திருப்போரூர்

# தாலி கட்டும் நேரத்தில் மணமகன் ஓட்டம்

நெல்லிக்குப்பம், குமிழியைச் சேர்ந்த இளைஞனுக்கும் செங்கல்பட்டை சேர்ந்த இளம்பெண்ணுக்கும் திருமணம் செய்ய இருவீட்டாரும் முடிவு செய்து இருந்தனர்.

அவர்களது திருமணம் திருப்போரூரில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற இருந்தது. திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இருவீட்டாரின் உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இரவு 11 மணி வரை வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மணமகன், மணமகளுடன் சேர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். பின்னர் மணமகன் அறைக்கு சென்றுவிட்டார்.

திருமணத்திற்கு சடங்குகள் செய்வதற்காக மணமகன் அறைக்கு சென்று மணமகனை அழைத்து வர உறவினர்கள் சென்றனர். ஆனால் அங்கு அவரில்லை. அவருடன் இருந்த நண்பர்களும் மாயமாகி இருந்தனர்.

மணமகன் ஓட்டம் பிடித்து இருப்பது தெரிந்தது. இதனால் மணப்பெண்ணும், திருமணத்துக்கு வாழ்த்த வந்த உறவினர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.



## ஆசியக் கிண்ணம்:

# இந்தியாவை வென்ற பாகிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மா, லோகேஷ் ராகுல் மூலம் அதிரடியான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில், ஷர்மாவை 28 (16) ஓட்டங்களுடனும், ராகுலை 28 (20) ஓட்டங்களுடன் அடுத்தடுத்த ஓவர்களில் ஹரிஸ் றாஃப், ஷடாப் கானிடம் இழந்தது.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் மொஹமட் நவாஸிடம் சூரியகுமார் யாதவ்வும், தொடர்ந்து அடுத்தடுத்த ஓவர்களில் றிஷப் பண்ட், ஹர்டிக் பாண்டியா ஆகியோர் ஷடாப் கான், மொஹமட் ஹஸ்னைனிடம் வீழ்ந்தனர். குறித்த நேரத்தின் பின்னர் நசீம் ஷாவிடம் தீபக் ஹூடாவும் வீழ்ந்திருந்தார்.

இந்நிலையில் நிலைத்து நின்று இறுதி ஓவரில் ரண் அவுட்டான விராட் கோலியின் 60 (44) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

பதிலுக்கு 182 ஓட்டங்களை வெற்றியிலகாகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே ரவி பிஷ்னோயிடம் அஸாமை இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் யுஸ்வேந்திர சஹாலிடம் பக்கர் ஸமனை இழந்தது.

எனினும், மொஹமட் றிஸ்வான், மொஹமட் நவாஸ் மூலம் வெற்றியிலக்கை நோக்கிப் பயணித்த பாகிஸ்தான், நவாஸை 42 (20) ஓட்டங்களுடனும் புவ்னேஷ்வர் குமாரிடமும், றிஸ்வானை 71 (51) ஓட்டங்களுடன் பாண்டியாவிடமும் இழந்தது.


இருந்தபோதும் இறுதி ஓவரில் அர்ஷ்டீப் சிங்கிடம் ஆட்டமிழந்த ஆசிஃப் அலியின் 16 (08), குஷ்டில் ஷாவின் ஆட்டமிழக்காத 14 (11), இஃப்திஹார் அஹ்மட்டின் ஆட்டமிழக்காத 02 (01) ஓட்டங்களின் துணையோடு ஒரு பந்து மீதமிருக்கையில் 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை பாகிஸ்தான் அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக நவாஸ் தெரிவானார்.

இந்நிலையில், டுபாயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இலங்கையை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.

## முதலாவது ODI இன்று:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா நியூசிலாந்து?



அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கி டையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் (ODI) தொடரானது, கெய்ன்ஸில் இன்று காலை 9.50 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

சிம்பாப்வேக்கெதிரான தோல்வியைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா மீளெழ வேண்டியுள்ளதுடன், டேவிட் வோர்னர் தவிர்ந்த ஏனைய துடுப்பாட்டவீரர்கள் முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஆரோன் பின்ஞ் அதிக கவனம் பெறுகிறார். இத்தொடரிலும் அவர் போர்முக்குத் திரும்பாத சந்தர்ப்பத்தில் அவரின் இறுதித் தொடராக இத்தொடர் அமையக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுபக்கமாக ட்ரெண்ட் போல்ட், லொக்கி பெர்கியூசன் என பலமான பந்துவீச்சு வரிசையுடன் காணப்படும் நியூசிலாந்து அண்மைய காலங்களில் இளம் வீரரான பின் அலெனும், கிளென் பிலிப்ஸ், டரைல் மிற்செல், டெவோன் கொன்வே ஆகியோர் ஓட்டங்களைப் பெறுவதும் அவ்வணிக்குச் சாதகமானதாகக் காணப்படுகின்றது.



# ஓய்வு பெற்ற ரஹீம்

இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக பங்களாதேஷின் விக்கெட் காப்பாளர் முஷ்பிக்கூர் ரஹீம் அறிவித்துள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் கவனஞ் செலுத்துவதற்காகவே இவ்வாறு ஓய்வு பெறுவதாக 35 வயதான ரஹீம் கூறியுள்ளார்.

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் சொல்லிக் கொள்ளும்படியான தரவுகளை ரஹீம் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

102 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் 1,500 ஓட்டங்களை ரஹீம் கொண்டிருந்தார்.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# ஆர்சனலை வீழ்த்திய யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை புகாயோ ஸாகா பெற்றிருந்ததோடு, யுனைட்டெட் சார்பாக மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் இரண்டு கோல்களையும், அந்தனி ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-5 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோல்வியடைந்தது.



கனடா

## கனடாவில் பயங்கரம்; கத்திக் குத்துத் தாக்குதலில்

# 10 பேர் உயிரிழப்பு



கனடாவின் சஸ்கட்சாவான் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து மர்ம நபர்கள் நடத்திய கத்திக் குத்துத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளமை அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஜினா நகரில் உள்ள ஜேம்ஸ் ஸ்மித் சீர் நேஷன், வெல்டன், சஸ்கடன் ஆகிய பகுதிகளிலேயே நேற்று முன்தினம்( 4) அடுத்தடுத்து கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்தனர் எனவும் 15 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட டுவிட்டர் பதிவில், “சஸ்காட்செவனில் இன்று நடந்த தாக்குதல்கள் கொடூரமானவை மற்றும் இதயத்தை உடைப்பவை. தங்களை நேசிப்பவரை இழந்து தவிப்பவர்கள் மற்றும் காயமடைந்தவர்களைப் பற்றி நான் நினைத்து பார்க்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

# பாடசாலையில் குண்டு வெடிப்பு; 4 பேர் உயிரழப்பு



ஆப்கானி ஸ்தானில் பாடசாலையொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள ஹெல்மண்ட் மாகாணம் நாட் அலி மாவட்டத்தில் உள்ள பாடசாலையொன்றிலேயே கடந்த 3 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த பாடசாலை மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது அப்பகுதியில் வெடிக்காத பீரங்கிக் குண்டொன்று காணப்பட்டுள்ளதாகவும், அது வெடிகுண்டு என்பதை அறியாத சிறுவர்கள் அதனை வகுப்பறைக்குள் எடுத்துச் சென்று விளையாடியுள்ளனர் எனவும் அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் திடீரென அப் பீரங்கி குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 7 முதல் 14 வயதுக்குட்பட்ட 4 சிறுவர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர் எனவும், 3 சிறுவர்கள் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அவுஸ்திரேலியா

# இப்படியும் ஓர் உலக சாதனை

அவுஸ்திரேலியாவில் 727 அடி உயரத்தில இருந்து வீசப்பட்ட ரக்பி பந்தைப் பிடித்து முன்னாள் காற்பந்து வீரரான பிரெண்டன் பெவோலா கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறார்.

மெல்போர்னில் உள்ள மைதானத்தின் மேலே வானில் பறந்த ஹெலிகொப்டரில் இருந்து வீசப்பட்ட ரக்பி பந்தை பிரெண்டன் பெவோலா துல்லியமாக பிடித்து இச் சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னதாக, 600 அடி உயரத்தில் இருந்து வீசப்பட்ட ரக்பி பந்தை பிடித்ததே சாதனையாக இருந்த நிலையில், தற்போது அந்த சாதனையை பிரெண்டன் பெவோலா முறியடித்துள்ளார்.



ரஷ்யா

## 13,000 அடி உயரத்தில் இருந்து விழுந்து


# 6 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவில் எரிமலையில் ஏறி கொண்டிருந்த மலையேற்ற வீரர்கள் 6 பேர் சுமார் 13,000 அடி உயரத்தில் இருந்து விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாஸ்கோ, மிகப்பெரிய எரிமலை ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் குளூச்செவ்ஸ்கயா சோப்கா என்ற எரிமலை ஒன்று உள்ளது. சுமார் 15,884 அடி உயரம் கொண்ட இந்த எரிமலை யூரேசியாவின் மிக உயரமான எரிமலையாக அறியப்படுகிறது.

இந்நிலையில் உள்நாட்டை சேர்ந்த 10 மலையேற்ற வீரர்கள் குறித்த மலை மீது ஏறும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் , எதிர் பாராத விதமாக 13,000 அடி உயரத்தில் அவர்களில் 4 பேர் திடீரென கீழே விழுந்துள்ளனர் எனவும் அடுத்த சில நிமிடங்களில் மேலும் 2 வீரர்கள் கீழே விழுந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13,000 அடி உயரத்தில் இருந்து விழுந்ததில் மலையேற்ற வீரர்கள் 6 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.




பிரித்தானியா

# உண்மையால் பரபரப்பு


கொலைக் குற்றத்திற்காக தவறாக குற்றம் சாட்டப்பட்டு 70 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய சிறையில் தூக்கிலிடப்பட்ட நபரின் குடும்பத்தினரிடம், நீதி தவறியதற்காக பிரித்தானியா காவல்துறை மன்னிப்புக் கோரியுள்ளது.

1952-ஆம் ஆண்டில் கார்டிஃப் நகரத்தில் ஆடை வியாபாரியான Lily Volpert என்ற பெண்ணை கொலை செய்ததற்காக, மஹ்மூத் மட்டான் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். மட்டான் குற்றம் புரியவில்லை என்று நிரூபிக்க அவருடைய மனைவியும், மகன்களும் கடந்த 46 ஆண்டுகளாக போராடி வந்துள்ளனர். ஆனால், அவர்கள் யாரும் இப்போது உயிருடன் இல்லை. இந்நிலையில் நீதி தாமதமாகவே கிடைத்துள்ளது என்று மட்டானின் பேத்தி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இச்சம்பவமானது பெரும் பேசுபொருள் ஆகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோமாலியா

## பயணித்த வாகனங்களுக்குத் தீ வைப்பு

# 19 பேர் உயிரிழப்பு



சோமாலியாவில் வீதியில் சென்ற வாகனங்களை நிறுத்தி பயங்கரவாதிகள் தீ வைத்துள்ள சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சோமாலியாவில் அல் கொய்தா ஆதரவு பெற்ற அல் ஷபாப் பயங்கரவாத அமைப்பினர் அந்நாட்டில் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக குறித்த பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் அவ்வப் போது பொலிஸார் இராணுவ வீரர்கள் மற்றும் அரசு அதிகாரிகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சோமாலியாவின் மத்திய பகுதியில் உள்ள ஹிரான் மாகாணத்தில் பெலெட்வேய்ன் மற்றும் மாக்சாஸ் நகரங்களுக்கு இடையே உள்ள வீதியில் பயணித்த கார், லொறி உட்பட 8 வாகனங்களை பயங்கர வாதிகள் தீ வைத்து எரித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கோர சம்பவத்தில் அந்த வாகனங்களில் பயணம் செய்த பெண்கள், சிறுவர்கள் உட்பட 19 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 06 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.